Thiruthuraipoondi Union Level Scouts & Guides Testing Camp **PRATHAMA SOPAN AND TIRUTHIYA SOPAN** Held on 11th March, 2017.

தினமலர் தேதி-13.03.2017- பக்கம்- 8

# சாரண, சாரணியர் பயிற்சி முகாம்

**திருத்துறைப்பூண்டி:** திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக். பள்ளியில் ஒன்றிய அளவிலான சாரண சாரணியர் முகாம் முதல்வர் செல்லதுரை தலைமையில் நடந்தது. தலைமை ஆசிரியர் லட்சுமிபிரியா முன்னிலை வகித்தார். சாரணியர் உறுதி மொழி, விதி, குறிக்கோள், முதல் உதவி, மதிப்பிடுதல், திசைகள் , வனக்கலை குறிப்பு, உடற்பயிற்சிகள் ஆகிய தலைப்புகளில் மாவட்ட உதவி செயலாளர் சக்கரபாணி, பயற்சியாளர் இளையராஜா, சாரணஅமைப்பு ஆணையர் கவிதா ஆகியோர் பயிற்சி அளித்தனர். தேர்வு செய்யப்பட்ட 153 சாரண, சாரணியர்களுக்கு பள்ளி நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம் சான்றிதழ் வழங்கினார். சாரண ஆசிரியர் ரவி வரவேற்றார். வழிகாட்டி தலைவி, சுமித்திராதேவி நன்றி கூறினார்.



திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக். பள்ளியில் சாரண, சாரணியர்களுக்கு நடந்த பயிற்சி முகாமில் தேர்வுபெற்ற சாரணியர்களுக்கு பள்ளி நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம் சான்றிதழ் வழங்கினார்.

**தமிழ் சுடர்** - நாள்: 13.03.2017-பக்கம்-3

# சாரண, சாரணியர்களுக்கு பயிற்சி முகாம்



திருத்துறைப்பூண்டி மார்ச்.13-

திருத்துறைப்பூண்டி ஒன்றிய அளவில் சாரண சாரணியர்களுக்கான ஒரு நாள் பிரதம சோபான் மற்றும் திருதியசோபான் மற்றும் சோதனை பயிற்சி முகாம் சாய்ராம் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பள்ளி முதல்வர் செல்லத்துரை தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை லெட்சுமி பிரபா முன்னிலை வகித்தார். சாரணஆசிரியர் ரவி வரவேற்றார். சாரண உறுதிமொழி, விதி, குறிக்கோள், முதல்உதவி, மதிப்பிடுதல், திசைகள், வனக்கலை குறிப்பாக உடற்பயிற்சிகள் ஆகிய தலைப்புகளில் மாவட்ட உதவி செயலாளர் சக்கரபாணி மாவட்ட பயிற்சியாளர், மாவட்ட பயிற்சி யாளர் இளையராஜா, மாவட்ட சாரணிய அமைப்பு ஆணையர் கவிதா பயிற்சியளித்து சோதனை செய்தனர்.

தேர்வு பெற்ற 153 சாரண சாரணியர் களுக்கு நிர்வாக பிரதிநிதி சோமசுந்தரம் சான்றிதழ் வழங்கினார். இதில் சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரசினர் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, நெடும்பலம் அரசினர் மேல் நிலைப்பள்ளி,

கட்டிமேடு மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து 153 சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர்.

வழிகாட்டி தலைவி சுமித்ரா தேவி நன்றி கூறினார்.

தினபூமி - நாள்: 13.03.2017-பக்கம்-5

# திருத்துறைப்பூண்டி ஒன்றிய அளவில் சாரண சாரணியர்களுக்கான சோதனை முகாம்



திருத்துறைப்பூண்டி மார்ச்.13

திருத்துறைப்பூண்டி ஒன்றிய அளவில்"சாரண சாரணியர்களுக்கான ஒரு நாள் பிரதம சோபான் மற்றும் திருதிய சோபான் மற்றும் சோதனை முகாம் சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

**153 சாரண, சாரணியர்கள்**

பள்ளி முதல்வர் செல்லத்துரை தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை லெட்சுமிபிரபா முன்னிலை வகித்தார். சாரண ஆசிரியர@ ரவி வரவேவற்றார@. சாரண உறுதி மொழி, விதி, குறிக்கோள், முதல்உதவி, மதிப்பிடுதல், திசைகள், வனக்கலை குறிப்பாக உடற்பயிற்சிகள் ஆகிய தலைப்புகளில் மாவட்ட உதவி செயலாளர் சக்கரபாணி மாவட்ட பயிற்சியாளர், மாவட்ட பயிற்சியாளர் ஈளையராஜா, மாவட்ட சாரணிய அமைப்பு ஆணையர் கவிதா பயிற்சியளித்து சோதனை செய்தனர். தேர்வு பெற்ற 153 சாரண சாரணியர்களுக்கு நிர@வாக பிரதிநிதி சோமசுந்தரம் சான்றிதழ் வழங்கினார். இதில் சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரசினர் ஆண்கள் டீமல்நிலைப்பள்ளி, நெடும்பலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, கட்டிமேடு மேல்நிலைப்பள்ளிகளில் இருந்து 153 சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர். வழிகாட்டி தலைவி சுமித்ரா தேவி நன்றி கூறினார்.